*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 16/2022(II)*

எனது இலக்கம் : *EST-6/03/LEA/1060*
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு *07.*

*2022.07.24*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பதை மட்டுப்படுத்துதல்**

மேற்படி தலைப்பில் மறு அறிவித்தல் வரை நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்ட *2022.06.26* ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை *16/2022(I)* மற்றும் *2022.06.20* ஆந் திகதி முதல் இரண்டு வார காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையில் வெளியிடப்பட்ட *2022.06.17* ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை *16/2022* மற்றும் *2022.06.15* ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை *15/2022* ஆகிய சுற்றறிக்கைகளுக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

*02.* அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை *16/2022* இன் ஏற்பாடுகள் இரண்டு வாரங்களுக்குப் பொருந்தும் வகையில் வெளியிடப்பட்டிருந்தாலும், அந்த இரண்டு வாரங்கள் நிறைவடைந்த பின்னரான காலப்பகுதி மற்றும் தற்போதைய நிலைமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் *16/2022(I)* சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படும் *2022.07.24* ஆந் திகதி வரையிலும் அன்றிலிருந்து அடுத்த ஒரு மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் எனக்கருதி செயற்பட வேண்டும்.

*03.* அரசாங்க உத்தியோகத்தர்கள் பணிக்கு சமூகமளிப்பதில் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு, அதற்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை தவறாகப் பயன்படுத்தி பணிக்கு சமூகமளிக்க முடியுமான உத்தியோகத்தர்களும் பணிக்கு சமூகமளிக்காத நிலை ஏற்பட இடமளிக்கலாகாது.

*04.* நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்காக எரிபொருள் விநியோகம் மீளமைக்கப்பட்டு வருவதுடன், அதன்படி எதிர்வரும் நாட்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளும் படிப்படியாக மீளமைக்கப்படும். இந்த விடயங்களை கருத்திற்கொண்டு, இணையவழி ஊடாக மேற்கொள்ள முடியாத பணிகளுக்கும் அத்தியாவசிய பொதுச் சேவைகளை பேணுவதற்கும் தேவையான உத்தியோகத்தர்களை வரவழைப்பதற்கு இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் தடையாக அமையாது என்பதையும் மேலும் அறியத்தருகிறேன்.

*05.* *2022.07.22* ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./ எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு